முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1464

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.10.2023**, திங்கட்கிழமை

1. அறமெனும் சக்தியாய் வாழுகின்ற
அன்னதான ஞான வள்ளலே
வரம்தந்து சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞானஅறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள், 02.10.2023, திங்கட்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் உன்கொள்கை தான்
அகிலத்தை ஆளப் போகுதப்பா
வாசிவென்ற உன் தொண்டர்படைகள்தான்
வையகத்தை வலம்வந்து காக்கப்போகுதப்பா
3. அப்பனே அரங்கன் உன்வழி யானே
அற்புதத்தை உலகத்தில் நடத்தப்போகின்றேன்
ஒப்புகொண்டு இன்னும் தொண்டர்படைகள் உலகமெல்லாம் அளவிலாப் பெருகவேண்டும்
ஒப்புகொண்டு இன்னும் தொண்டர்படைகள் உலகமெல்லாம் தர்மம் செய்யவேண்டும்
4. வேண்டிவேண்டி எங்கும் உன்பேரிலான
விடாது விழாவும் ஞானிகளும் பூஜையுமாக
தொண்டர்கள் மிகுதியாக செய்து வருகவருக தேசமெங்கும் ஓங்கார ஒலி நிரம்பி
தெரிவிப்பேன் சரவணஜோதி ஒளியும் பரவி
5. பரவியே பேருலகம் சுத்தமாகும்
பாவிகளெல்லாம் முடிவுகண்டு இந்த பேருலகில்
ஞானமெனும் உயர்நிலை கொண்ட மாந்தர்கள்வழி
நம்பகம்கொண்ட அரங்கன் சீடர்கள் வழி
6. வழிதனில் உலக மாற்றமாக
வையகத்தை ஆறுமுகன்யான் மாற்றம்செய்வேன்
செய்யவே அரங்கன் தொண்டு
சிறப்பான கலியின் தொண்டாகும்

7. அய்யமற அரங்கன் தொண்டரென
அறிவிப்பேன் சரணாகதி கொண்டு இருப்பவரெல்லாம் ஆறுமுகன்
என்னால் ஞானிகளாக்கப்பட்டு
அகிலத்தில் நல்ல ஆளுமைக்கு உரியவர்களாகவும் அதன்
அங்கத்தினர்களாகவும் மாற்றம் செய்யப்பட்டு
அரங்கன்வழி ஞானஆட்சியை உறுதிசெய்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–